காங்கயம் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை திரு.கி.பால்ராஜ், எம்.ஏ.,

ந.க.எண்.948/2024/எப்1 நாள்.20.04.2026.

பொருள்: மனைப்பிரிவு அனுமதி – காங்கயம் நகராட்சி – காங்கயம் கிராமம் – ரீ.ச.எண்.213/2 மற்றும் 216/1–ல் 7100.00 ச.மீட்டர் (1.76 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :

1. மனுதாரரர் திருமதி.A.ஹசீனா சுல்தானா மற்றும் அஸாருல்லா என்பவர்களின் இணையதள விண்ணப்பம் எண். GSHCYDSP/2024/TCP நாள்.28.05.2024.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம். திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். GSHCYDSP/2024/TCP நாள்.27.06.2024.
3. காங்கயம் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண்.3956/2024 நாள்.03.07.2024.
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் தொழில்நுட்ப ஒப்புதல் உத்திரவு எண்.GSHCYDSP/2024/TCP நாள்.09.07.2024.
5. அரசாணை எண்.79 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ – 4(3) நாள்.04.05.2017.
6. அரசாணை எண்.53 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ – 4(1) நாள்.28.03.2025.
7. தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைப்பதற்கான மின்வாரிய சலான் எண். PGCCAN768392741 நாள்.28.07.2025.
8. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம். திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதம் ந.க.எண்.1715/2024/திமா நாள்.07.01.2026.
9. இந்நகர்மன்ற சாதாரண கூட்ட தீர்மான எண்.1309 நாள்.27.01.2026.
10. காங்கயம் நகராட்சி கருவூலம் பற்றுச்சீட்டு எண்.158/158/01/25–26/0000310, 158/158/01/25–26/0000309, நாள்.31.12.2025 மற்றும் 158/158/01/25–26/0012168 நாள்.30.03.2026.
11. நிலப்பயன்மாற்றகட்டணம் இணையதள செலுத்துச்சீட்டு எண்.20260416032616 நாள்.16.04.2026.

*****

உத்தரவு :

காங்கயம் நகராட்சி எல்லைக்குட்பட்ட, காங்கயம் கிராமம், ரீ.ச.எண். 213/2 மற்றும் 216/1-ல் 7100.00 ச.மீட்டர் (1.76 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி பார்வை 1-ல் காணும் திருமதி.A.ஹசீனா சுல்தானா மற்றும் அஸாருல்லா என்பவர்களின் விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, உத்தேச மனைப்பிரிவிற்குரிய பொது ஒதுக்கீடு மற்றும் சாலைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சாலை அமைப்பு வரைபடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. பார்வை 3-ல் கண்டுள்ள காங்கயம் சார்பதிவாளர் அலுவலக தான ஆவணம் மூலம் காங்கயம் நகராட்சிக்கு சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடுகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. பார்வை 4-இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம் அவர்களின் ஆணையில், மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/DTCP/TIRUPPUR/LAYOUT No.181/2024 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. பார்வை 5 மற்றும் 6-இல் காணும் அரசாணைகளில் தெரிவித்துள்ளபடியும், பார்வை 8-ல் கண்டுள்ள தெளிவுரையின் படியும், பார்வை 11-ல் நிலப்பயன்பாடு மாற்றம் செய்வதற்கான உரிய கட்டணம் அரசு கணக்கு தலைப்பில் ரூ.7,60,000/- செலுத்தப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவிற்கு நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் பார்வை 10-இல் கண்டுள்ள செலுத்துச்சீட்டுகளின்படி, 1)நிலப்பயன்மாற்றத்திற்கான கூர்ந்தாய்வுக் கட்டணம் ரூ.34000, 2) கொடிநாள் கட்டணம் ரூ.1000/-, 3) மனைப்பிரிவு கூர்ந்தாய்வுக் கட்டணம் ரூ.10650 /-, மற்றும், மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.18000/- 4) மனைப்பிரிவு வளர்ச்சி கட்டணம் ரூ.42600 5) காப்புத்தொகை ரூ.180000 ஆகிய கட்டணங்கள் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது பார்வை 7-ல் கண்டுள்ளபடி தெருவிளக்கு மின்கம்பங்கள் அமைப்பதற்கான கட்டணம் ரூ.1,94,760/-. மேலும், மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள மனைகளுக்கு காலியிட வரி செலுத்தப்பட்டுள்ளது. காங்கயம் கிராமம் ரீ.ச.எண். 213/2 மற்றும் 216/1-ல் 7100.00 ச.மீட்டர் (1.76 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, பார்வை 9-இல் கண்டுள்ள இந்நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, காங்கயம் நகராட்சிக்குட்பட்ட, காங்கயம் கிராமம், ரீ.ச. எண். 213/2 மற்றும் 216/1–ல் 7100.00 ச.மீட்டர் (1.76 ஏக்கர்) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருப்பூர், அவர்களால் தெரிவித்த நிபந்தனைகளுடனும் மற்றும் நகராட்சிக்கோ அல்லது அரசுக்கோ செலுத்தப்பட்ட கட்டணங்கள் குறைவாக இருப்பின், அக்கட்டணங்களை செலுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனையுடனும் இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

20/4/26

ஆணையாளர்
காங்கயம் நகராட்சி

இணைப்பு.

மனைப்பிரிவு வரைபடம் மற்றும் நிபந்தனைகள்.

20/04/2026

பெறுதல்.

திருமதி.A.ஹசீனா சுல்தானா மற்றும் அஸாருல்லா,
கதவு எண்.6/93A,
அய்யாசாமி நகர் காலனி,
காங்கயம்.
திருப்பூர் மாவட்டம் – 638701.

நகல்.

1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.
2. நகராட்சி பொறியாளர், காங்கயம் நகராட்சி (வரைபட நகல் மற்றும் தான சாசன நகலுடன்) மேற்படி மனைப்பிரிவில் உள்ள சாலையினை சொத்துப்பதிவேடு மற்றும் சாலைகள் பராமரிப்பு பதிவேடு ஆகியவற்றில் பதிவு செய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது.
3. சார்பதிவாளர், காங்கயம் (வரைபட நகலுடன்) அவர்களுக்கு தகவலுக்காக.